# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம்

---

*(1998, மாச்சு மாதம் 27 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1998, மாச்சு மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 2.50**

# 1998 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.– ஓ. 66/96

## மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

203 ஆம் அத்தியாயத்தில் 213அ, 213ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

2. மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஆம் பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அச்சட்டத்தின் முறையே 213அ, 213ஆ என்னும் பிரிவுகளாக அவை பயனுறுதலும் வேண்டும் :–

"வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவை.

213அ. (1) வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவையொன்று இருத்தல் வேண்டும். இது அமைச்சரால் நியமிக்கப்படும் தலைவர் ஒருவரையும் பின்வரும் பதினேழு ஏனைய உறுப்பினர்களுக்கு மேற்படாதோரையும் கொண்டிருத்தல் வேண்டும்:–

(அ) இயைபான அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படும், கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

(ஆ) இயைபான அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படும், நிதி, திட்டமிடல் என்னும் விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

(இ) இயைபான அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படும், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி என்னும் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

2-டீ- 045783-1,100 (97/10)

(ஈ) இயைபான அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படும் பெருந்தெருக்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

(உ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க. பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படும் அச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் மொறட்டுவை பல்கலைக் கழகத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(ஊ) இயைபான அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படும் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க. நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிநிதி ஒருவர் ;

(எ) இயைபான அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படும் 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க. வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிநிதி ஒருவர் ;

(ஏ) அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

(ஐ) 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதிநிதி ஒருவர் ;

(ஒ) மோட்டார் வாகனத் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(ஓ) 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்கு வரத்துச் சபையின் பிரதிநிதி ஒருவர் ;

(ஔ) இலங்கை விபத்துக்களைத் தடுப்பதற் கான சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(க) போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(ங) 1957 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை உந்து ஊர்திகள் சங்க (கூட்டிணைத்தல்) சட்டத்தின்மூலம் தாபிக் கப்பட்ட இலங்கை உந்து ஊர்திகள் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(ச) பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதி யுடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படும் பொலிஸ் திணைக் களத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(ஞ) கொழும்பு மாநகரசபையின் மாநகர முதல்வருடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படும் அச்சபையின் பிரதிநிதி ஒருவர் ; அத்துடன்

(ட) காப்புறுதிக் கட்டுப்பாட்டாளர் அல்லது அவரது பிரதிநிதி.

(2) வீதிப் பாதுகாப்புக்கான தேசியப் பேரவை யின் உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்புமூலம், அமைச்சருக்கு அதன் சார்பில் முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலமாகப் பதவி துறப்பதன்மூலம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்ன தாகவே அவர் பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனக் கடிதத்தில் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மூன்று ஆண்டுகளை விஞ்சாத அத்தகைய காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும். காலங் கழிவதன்மூலம் பதவியை வறிதாக்குகின்ற எவரேனும் உறுப்பினர் மீளநியமிக்கப்படு வதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(3) அமைச்சர், அதற்கான காரணம் எதுவும் காட்டாமல், வீதிப் பாதுகாப்புக்கான தேசியப் பேரவையின் உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) எவரேனும் உறுப்பினர் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், அவ்வுறுப்பினரைப் பின்னுறுவதற்கென அமைச்சர் வேறோர் ஆளை நியமிக்க வேண்டும்; அத்துடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர் தமக்கு முன்னிருந்தவரின் பதவிக் காலப்பகுதியில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய பதவியை வகித்தல் வேண்டும்.

(5) வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவையின் தலைவர் அவர் அவசியமெனக் கருதும் போதிலெல்லாம் அத்தகைய பேரவையின் கூட்டங்களைக் கூட்டலாம்; ஆயின் எவ்வாறாயினும், ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அதன் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பேரவையின் ஆறு உறுப்பினர்களுக்குக் குறையாதோரால் அவ்வாறு செய்யுமாறு எழுத்தில் அவர் வேண்டிக்கொள்ளப்படும் போதிலெல்லாம் அத் தலைவர் அத்தகைய பேரவையின் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(6) வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் எட்டாதல் வேண்டும்.

(7) வீதிப் பாதுகாப்புக்கான தேசியப் பேரவையினால் அலுவல்கள் கொண்டுநடாத்தப்படுவதற்கு ஏற்பாடுசெய்தும் அத்தகைய பேரவையின் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையை விதித்துரைத்தும் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம். அத்தகைய ஒழுங்கு விதிகளுக்கும் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக, வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவை அதன் சொந்த நடைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(8) வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதனகத்து ஏதேனும் வெற்றிடம் அல்லது அதன் உறுப்பினர் எவரதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

(9) வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவையின் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான எழுத்திலான பணிப்புகளை அதற்கு அமைச்சர் கொடுக்கலாம் என்பதுடன், வீதிப்பாது காப்புக்கான தேசியப் பேரவை அத்தகைய பணிப்புகளுக்கும் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(10) வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவையின் பின்னணிகள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

*வீதிப்பாதுகாப்பு நிதியம்.*

213ஆ. (1) இச்சட்டத்தின் VI ஆம் பாகத்தின்கீழ் மூன்றாம் திறத்தவர் இடர்கள் தொடர்பாக விடயத்துக்கேற்றாற்போல காப்புறுதிப் பத்திரமொன்று அல்லது பிணைப்பொறுப்பு வழங்குகின்ற காப்புறுதி செய்பவர் அல்லது ஆள் ஒவ்வொருவரும், விடயத்திற்கேற்றாற்போல அத்தகைய காப்புறுதிப் பத்திரத்துக்கென அல்லது பிணைப்பொறுப்புக்கென அவரிடம் செலுத்தப்பட்ட கட்டுப்பணத் தொகையிலிருந்து, விதித்துரைக்கப்பட்ட பணத்தொகைக்குச் சமமான அத்தகைய பணத்தொகையைக் கழித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு கழிக்கப்பட்ட பணத்தொகை (2) ஆம் உட்பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்துக்கு அனுப்பிவைக்கப்படச் செய்வித்தலும் வேண்டும்.

(2) (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "நிதியம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) வீதிப்பாதுகாப்பு நிதியம் என அழைக்கப்படவேண்டிய நிதியமொன்று இருத்தல் வேண்டும். இந்நிதியமானது வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவையினால் நிருவகிக்கப்பட்டு முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்துக்குள் செலுத்தப் படுதல் வேண்டும் :

(அ) ஓராமுட்பிரிவின்கீழ் நிதியத்துக்கு அனுப்பி வைக்கப்படும் எல்லாப் பணத்தொகை களும் ; அத்துடன்

(ஆ) நன்கொடைகளாக அல்லது மானியங்களாக நிதியத்தினால் பெறுப்படும் எல்லாப் பணத்தொகைகளும்.

(4) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும் :

(அ) வீதிப்பாதுகாப்பையும் விபத்தைத் தடுப் பதனையும் ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கு அல்லது வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவை யினால் அங்கீகரிக்கப்படும், விதித்துரைக் கப்படும் ஏனைய செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) மோட்டார் வாகன விபத்துக்களின் விளைவாக சொல்லப்பட்ட அல்லது காயமடைந்த ஆட்களுக்கு அல்லது அவர்களில் தங்கிவாழுபவர்களுக்கு அத்தகைய மோட்டார் வாகனங்கள் அடையாளங் காணப்படாத சந்தர்ப்பங் களில் நிதி உதவி அளிப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகை களும் ; அத்துடன்

(இ) வீதிப்பாதுகாப்புக்கான தேசியப் பேரவை யின் நிர்வாகச் செலவுகளைச் சமாளிப் பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத் தொகைகளும்.

(5) சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, நிதியத்துக்கு நன்கொடையாகக் கொடுக்கப்படும் எல்லாப் பணங்களும் 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள்ளாக அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு நிதியத்துக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட பணங்களாகும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.".

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.